Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 601/2025      PW-1**

Name : யுவராஜ்
Father / Husband name : மாணிக்கம்
Village : பழவேரி
Age : 43
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.06.2026

A2 presnt. A1 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by VM Pettai PS PS HC 1967 Tr.Selvam.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் சம்மந்தமாக வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். எந்த தேதியில் எந்தயிடத்தில் வைத்து போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் 06.05.2025 அன்று சுமார் மதியம் 1 மணியளவில் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் விசாரித்தார்கள். திண்டிவனம் அரசு மருத்துவமனையிலிருக்கும்போது போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சுயநினைவோடு தான் தாதாபுரத்திலிருந்து வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வந்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை புகாரின் அடிப்படையில் பதிவு செய்தார்களா அல்லது புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவு செய்தார்களா என்று தெரியுமா என்றால் தெரியாது.

2. அதன்பின்னர் போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் அதன்பிறகு விசாரிக்கவில்லை. போலிசார் விசாரணையில் நான் அதற்கு பயந்துகொண்டு தப்பித்து ஓடும்போது மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்து முகம், தாடை ஆகிய இடங்களில் அடிப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, நான்

அவ்வாறு சொல்லவில்லை. புகார் வாக்குமூலத்தில் என்னை மொட்டை மாடியிலிருந்து தள்ளிவிட்டனர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் மாடிப்படிக்கட்டில் தள்ளிவிட்டார்கள், அதில் எனக்கு முகம், தாடை, தலை ஆகிய இடங்களில் அடிப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், மாடியிலிருந்து அதன் பக்கத்திலிருக்கும் படிக்கட்டிலிருந்து தள்ளிவிட்டார்கள். சம்பவத்தின்போது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் மாடியில் எதிரிகள் மற்றும் 2வது எதிரியின் அம்மா இருந்தார், கீழே யார் இருந்தார்கள் என்று தெரியாது. சம்பவத்தை எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் அக்கம் பக்கத்திலிருப்பவர்கள் பார்த்தார்கள், எனக்கு காயம்பட்டதால் எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்று கவனிக்கவில்லை.

3. சாட்சி சரவணன் என்னுடன் வந்தவரா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தில் காத்தவராயன், குணசுந்தரி, காளி, குப்பன்பிள்ளை, செங்கேணி, மாணிக்கம் ஆகியோர்கள் வீடுகள் சம்பவயிடத்திற்கு சுற்றி உள்ளது என்றால் தெரியாது. அந்த வீடுகளில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் தெரியாது. 3 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன், அவர்களின் பெயர்களை புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, சந்திரன், மாலதி மீது புகார் கொடுத்தேன், மற்றும் பலர் என்று போலிசார் எழுதியிருப்பார்கள். விபத்து பதிவேட்டில் என்னை 3 நபர்கள் தாக்கியதாக உள்ளது என்றால் தெரியாது, என்னிடம் கேட்கவில்லை. மருத்துவரிடம் நடந்த விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான், மருத்துவரிடம் நான் சொல்லவில்லை.

4. சம்பவம் மே மாதம் என்பதால் மாலை 6, 6.30 மணியளவில் சூரியன் இருக்கும் என்றால் சரியல்ல, சம்பவ சமயத்தில் சூரியன் இல்லை. அந்த சமயத்தில் எதிரிலிருக்கும் நபரின் முகம் தெரியாது என்றால் சரியல்ல. நான் குடிபோதையில் 2வது எதிரியை அடித்து, அவரின் தாலியை பிடிங்கிவிட்டு

மொட்டை மாடியில் நானே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. மொட்டை மாடியிலிருந்து நான் விழுந்துவிட்டு எதிரிகளை பழிவாங்க எதிரிகள் மீது பொய்யா புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த புகாரை தவிர்த்துவிட்டு போலிசார் வாக்குமூலம் பதிவு செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கில் நான் சொன்ன சாட்சிகள் உள்ளூர் சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரையும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் சென்னையில் ஆட்டோ ஓட்டினேன், ஞாயிற்றுக்கிழமையில் வீட்டிற்கு வருவேன்.

5. எனக்கு முதல் மனைவியுடன் எதற்காக விவாகரத்து ஆனது என்றால் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நான் குடிபோதையில் இருந்ததால் கருத்துவேறுபாடு ஏற்பட்டது என்றால் இல்லை. 2வது எதிரியை எப்போது நான் திருமணம் செய்தேன் என்றால் 03.03.2025. திருமணமான 2 மாதத்தில் 2வது எதிரியை அடித்துவிட்டு அவரின் அப்பா, அம்மாவையும் அடித்தேன் என்றால் சரியல்ல. பொய்யான புகார் கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. 2வது சாட்சி சரவணன் எனக்கு என்ன உறவு என்றால் துரத்து மாமா உறவு. சாட்சி வரலட்சுமி எனக்கு என்ன உறவு என்றால் துரத்து அத்தை மகள் உறவு. சாட்சி பிரபாகரன் என்ன உறவு என்றால் நண்பர். சுப்ரமணி என்ன உறவு என்றால் சித்தப்பா. நான் எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் தெரியாது, சுமார் 06.30 மணி இருக்கும்.

6. காவல் நிலையத்திலிருந்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் தெரியாது. வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திலிருந்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு எப்படி சென்றேன் என்றால் காவல் நிலையத்திற்கு வெளியில் வந்த ஆம்புலன்ஸ் மூலமாக வந்தேன்.

திண்டிவனம் அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் இருந்தேன் என்றால் உடனே முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். நான் மயக்கத்திலிருந்தபோது மேற்படி விவரம் எனக்கு தெரிந்தது என்றால் பாதி மயக்கத்திலிருந்தேன், முண்டியம்பாக்கம் மருத்துவமனையிலிருக்கும்போது தெளிந்தது. எத்தனை நாட்கள் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் இருந்தேன் என்றால் 1 நாள் இருந்தேன், பின்னர் பெட் இல்லாததால் வெளியில் சென்றுவிட்டேன். முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையிலிருந்தபோது போலிசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்திற்கு மறுநாள் காலை சுமார் 10 மணியளவில் ஒருவர் விசாரித்துவிட்டு சென்றார், பின்னர் மற்றொரு போலிசார் வந்து எழுதி என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம் கையொப்பம் வாங்கிய போலிசார் சீருடையில் இருந்தாரா என்றால் ஆமாம். அவர் என்ன பதவியிலிருந்தார் என்றால் உதவி ஆய்வாளர், பெயர் தெரியாது. அவர் உதவி ஆய்வாளரா, ஆய்வாளாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 601/2025 PW-2**

Name : வரலட்சுமி
Father / Husband name : லோகநாதன்
Village : மாங்காடு
Age : 47
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.06.2026

A2 present. A1 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. APP absent. Witness identified by VM Pettai PS PS HC 1967 Tr.Selvam.

**முதல் விசாரணை**

நான் பூக்கடை வைத்துள்ளேன். அ.சா.1 யுவராஜ் எனது உறவினர். சாட்சி சரவணன் என்பவர் எனக்கு தெரியும், ஊர்க்காரர். சாட்சி பிரபாகரன் த/பெ தட்சணாமூர்த்தி என்பவரை தெரியும். ஆஜர் 2வது எதிரியை எனக்கு தெரியும். 1வது எதிரி சந்திரனை நான் பார்த்ததில்லை. கடந்த 05.05.2025 அன்று யுவராஜ் அவரின் அம்மாவை 2வது எதிரி பார்த்துக்கொள்ளவில்லை என்பதால் அவரின் அம்மாவை மருத்துவமனையில் பார்க்கச்செல்வதாக சொல்லி சென்றார். மருத்துவமனையிலிருந்தவர்கள் 2வது எதிரி மருத்துவமனையில் அ.சா.1 ன் அம்மாவை பார்த்துக்கொள்ளவில்லை என்று சொன்னதால் 2வது எதிரியை சென்று பார்த்துவிட்டுவருவதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். சிறிது நேரத்தில் அ.சா.1 எனக்கு போன் செய்து மாலதியின் அப்பா அவரின் கையை கடித்து மாடிப்படிக்கட்டிலிருந்து கீழே தள்ளிவிட்டதாகவும், காவல் நிலையம் செல்வதாகவும் சொன்னார். பின்னர் இரவு 10.30 மணியளவில் ஒருபோலிசார் எனக்கு போன் செய்து அ.சா.1 க்கு அடிப்பட்டிருப்பதால் என்னை வரச்சொன்னார், நான் காலையில் வருவதாக சொன்னேன். நான் மறுநாள் காலை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது யுவராஜின் தாடை, முகம், காதுகளில் இரத்தக்காயம் இருந்தது, அவரின் கையில்

கடித்தக்காயம் இருந்தது. பின்னர் அ.சா.1 ஐ சென்னையிலுள்ள ஏசிஎஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. சம்பவ தேதி என்ன என்றால் 05.05.2025. எத்தனை மணிக்கு யுவராஜ் போன் செய்து அடிப்பட்டதாக சொன்னார் என்றால் இரவு 7 மணிக்கு சொன்னார். அசா.1 தெளிவாக நடந்த சம்பவம் பற்றி என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். நான் உடன கிளம்பி வந்தேனா என்றால் இல்லை. சம்பவத்தை நான் நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. கேள்விபட்டு தான் சம்பவம் பற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். மறுநாள் 06.05.2025 அன்று காலை 5 மணிக்கு நான் வந்த பிறகு போலிசார் எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார்கள் என்றால் சுமார் 7, 8 மணிக்கு விசாரித்தார்கள். அ.சா.1 ஐ எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் போலிசார் என்னை விசாரிப்பதற்கு முன்பு யுவராஜை விசாரித்தார்கள். போலிசார் சீருடையில் இருந்தாரா என்றால் ஆமாம்.

2. போலிசார் விசாரணையில் எனது தம்பி யுவராஜ் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது முதல் விசாரணையில் எனது மாமன் மகன் என சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, மாமா உறவு என்று சொல்லியுள்ளேன். யுவராஜ்க்கு எத்தனை திருமணம் நடந்தது என்றால் 2 திருமணம் நடந்ததுள்ளது. அ.சா.1 ன் முதல் மனைவியின் பெயர் என்ன என்றால் சரஸ்வதி. அ.சா.1 குடித்துவிட்டு முதல் மனைவியை அடித்ததால் அவர் விவாகரத்து வாங்கிசென்றார், 2வது எதிரியை அடித்ததால் அவர் அவரின் அப்பா வீட்டில் இருந்தார், அ.சா.1 அங்கு சென்று பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல, 2வது எதிரிக்கு 4 திருமணம் நடந்துள்ளது. போலிசார் விசாரணையில் தனக்கு

கொலை மிரட்டல் விடுத்ததால் யுவராஜ் தப்பி ஓடும்போது மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3. அ.சா.1 முதலில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் திண்டிவனம் அரசு மருத்துவமனை. முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் எத்ததனை நாட்கள் இருந்தார் என்றால் அங்கு சிகிச்சை சரியாக எடுக்காததால் உடனே சென்றுவிட்டார். சென்னை ஏசிஎஸ் மருத்துவமனையில் அ.சா.1 சிகிச்சை எடுத்துக்கொண்டதை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அதனை எழுதிக்கொண்டார்களா என்றால் தெரியாது. அ.சா.1 யிடம் வாக்குமூலம் எந்த மருத்துவமனையில் வாங்கினார்கள் என்றால் முண்டியம்பாக்கம் மருத்துவமனையில் வாங்கினார்கள். அசா.1 எனக்கு வேண்டியவர் என்பதால் பார்க்காத சம்பவத்தை கேட்காத சம்பவத்தை சாட்சியமாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.1 மதுகுடிப்பாரா என்றால் எப்போதாவது குடிப்பார். சம்பவத்தன்று யுவராஜ் குடித்துவிட்டு சென்று 2வது எதிரியின் தாலியை அறுத்துக்கொண்டு ஓடும்போது தானாக மொட்டை மாடியிலிருந்து கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.